# குடியிருப்புகளில் தண்ணீர் தேங்கினால் நடவடிக்கை

## உழவர்கரை நகராட்சி எச்சரிக்கை

**புதுச்சேரி, நவ. 16:** உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தற்போது மழைக்காலம் தொடங்கிவிட்டதால் நீர் தேக்கத்தால் ஏற்படும் நோய்களான டெங்கு போன்றவற்றை கட்டுப்படுத்த உழவர்கரை நகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக உழவர்கரை நகராட்சியின் சுகாதார ஆய்வாளர்களை கொண்டு தங்கள் பகுதிகளில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளின் விபரம் சேகரிக்கப்பட்டு, அதில் உள்ள நிலத்தடி தளத்தில் ஆய்வு செய்து அங்கு தண்ணீர் தேங்கியுள்ளதா, தேங்கும் நீர் சரிவர வெளியேற்றப்படுகிறதா என்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்படி தேங்கியிருந்தாலோ அல்லது சரியாக வெளியேற்றப்படாமல் இருந்தாலோ உடனடியாக அவர்கள் மீது நகராட்சி விதிகளின் கீழ் சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.